மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்
அசல் வழக்கு எண். 541 /2021

**2023–ம் ஆண்டு மார்ச் மாதம் 20 ம் நாள் திங்கள்கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. கோ. லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வெங்கடாசலம் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : கண்ணுசாமி | வட்டம் | : குன்னம் |
| கிராமம் | : கீழப்பெரம்பலூர் | சமயம் | : – |
| சாதி | : – | வயது | : 66/2023 |

**பிரதிவாதி தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி**

1) கண்ணுசாமி மகன்கள் 1.வெங்கிட்டன், 2.ஆதிமூலம், 3. சுப்ரமணி ஆகியோர் பெயரில் உள்ள மனைவரி தோராயப்பட்டா ஏற்கனவே வாதி தரப்பு குறுக்க விசாரணையின்போது **பி.வா. சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்பட்டுவிட்டது. தாவா சொத்தின் ஒரு பகுதியில் எனது தம்பி கருணாநிதி குடியிருந்து வருவதற்கான கிராம பஞ்சாயத்தில் வழங்கப்பட்ட வீட்டு வரி ரசீதுகள் எண்ணிக்கை 6 **பி.வா. சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்தை பொறுத்து வாதியின் தந்தை பெயர் அளவில் ஏற்படுத்தப்பட்ட கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **பி.வா. சா.ஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2) 21.12.1996 ல் தாவா சொத்தை பொறுத்து வாதியின் தந்தை மற்றும் எனது சகோதரர்கள் இடையே ஏற்படுத்தப்பட்ட பாக பிரிவினை ஒப்பந்தம் ஆவணங்கள் எண்ணிக்கை 2 **பி.வா. சா.ஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்தின் ஒரு பகுதியில் எனது அண்ணன் சுப்ரமணியன் குடியிருந்து வருவதற்கான கிராம பஞ்சாயத்தில் வழங்கப்பட்ட வீட்டு வரி ரசீதுகள் எண்ணிக்கை 5 **பி.வா. சா.ஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மேற்படி ஆவணங்கள் வாதி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). வாதி தொடர்ந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டுமாய் வேண்டப்படுகிறது. ( வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது. )

Taken court by in open court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif–cum–Judicial Magistrate,
Kunnam.

DCUMNUNAM